தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை

ஹேவிளம்பி, ஆனி 15, திருவள்ளுவர் ஆண்டு–2048

2017 ஜூன் 29, வியாழக்கிழமை

சென்னை, புனித ஜார்ஜ் கோட்டையிலுள்ள சட்டமன்றப் பேரவை மண்டபத்தில் மாண்புமிகு பேரவைத் தலைவர் **திரு. ப. தனபால்** *அவர்கள் தலைமையில் காலை 10–00 மணியளவில் பேரவை கூடியது.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்:

“வெள்ளத்து அனைய மலர்நீட்டம்; மாந்தர்தம்
உள்ளத்து அனையது உயர்வு.”

தண்ணீரில் மலர்ந்திருக்கும் பூவினுடைய தண்டினது நீளம் தண்ணீர் உயரத்திற்கு இருக்கும். அதேபோல் ஒருவர் உள்ளத்தில் ஊக்கம் எந்த அளவு இருக்கின்றதோ, அந்த அளவிற்கு உயர்வு இருக்கும்.

1. வினாக்கள்-விடைகள்

உடுக்குறியிட்ட வினாக்கள்

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *வினாக்கள்-விடைகள். வினா வரிசை எண் 101, மாண்புமிகு உறுப்பினர் டாக்டர் ஆர்.டி. அரசு, மாண்புமிகு பள்ளிக் கல்வி மற்றும் விளையாட்டு மற்றும் இளைஞர் நலத் துறை அமைச்சர் அவர்கள்.*

101—

புதிய கட்டடம்

***19801—டாக்டர் ஆர்.டி. அரசு:**

மாண்புமிகு பள்ளிக் கல்வி மற்றும் விளையாட்டு மற்றும் இளைஞர் நலத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) செய்யூர் தொகுதி, இலத்தூர் ஒன்றியம், பவுஞ்சூரில் உள்ள உதவித் தொடக்கக் கல்வி அலுவலகத்திற்குப் புதிய கட்டடம் கட்ட அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

மாண்புமிகு திரு. கே.ஏ. செங்கோட்டையன், பள்ளிக் கல்வி மற்றும் விளையாட்டு மற்றும் இளைஞர் நலத் துறை அமைச்சர்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,*

(அ) மற்றும் (ஆ) காஞ்சிபுரம் மாவட்டம், செய்யூர் தொகுதி, இலத்தூர் ஒன்றியம், பவுஞ்சூரில் உள்ள உதவி தொடக்கக் கல்வி அலுவலகத்திற்குப் புதிய கட்டடம் கட்டுவதற்கு செயற்குறிப்பு ஏதும் அரசின் பரிசீலனையில் இல்லை.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் டாக்டர் ஆர்.டி. அரசு அவர்கள்.*

டாக்டர் ஆர்.டி. அரசு: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, வணக்கம். உலகெங்கும் வாழும் தமிழர்களின் ஒப்பற்றத் தலைவர் டாக்டர் கலைஞர் அவர்களையும், (மேசையைத் தட்டும் ஒலி) உழைப்பின் உதாரணமாகத் திகழும் எங்கள் உன்னத செயல் தலைவர் அவர்களையும் வணங்குகின்றேன். (மேசையைத் தட்டும் ஒலி)*

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, செய்யூர் தொகுதியில் உள்ள பவுஞ்சூர் மற்றும் சித்தாமூர் பகுதிகளில் இயங்கிவரும் உதவி தொடக்கக் கல்வி அலுவலகங்கள் மிகவும் பாழடைந்து, பலவீனமான நிலையில் உள்ளன. இரண்டு Block*–களையும் சேர்த்து, சுமார் 160 அரசு மற்றும் தனியார் பள்ளிகள் இயங்கி வருகின்றன. அப்பள்ளிகளில் பயிலும் மாணவர்களின் விவரம் மற்றும் இரண்டு* Block*–களிலும் பணியாற்றும் சற்றேறக்குறைய 548 ஆசிரியர்கள் மற்றும் பணியாளர்களின் பணிப் பதிவேடுகள், அதாவது* S.R. Books, *பாதுகாப்பற்ற நிலையில் உள்ளன. எனவே, இவ்விரு அலுவலகங்களுக்கும் புதிய கட்டடம் கட்டித் தருவதற்கு இந்த அரசு முன்வருமா என்பதைத் தங்கள் வாயிலாக அறிய விரும்புகிறேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு பள்ளிக் கல்வி மற்றும் விளையாட்டு மற்றும் இளைஞர் நலத் துறை அமைச்சர் அவர்கள்.*

மாண்புமிகு திரு. கே.ஏ. செங்கோட்டையன்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, உதவி தொடக்கக் கல்வி அலுவலகங்களுக்குப் புதிய கட்டடம் கட்டித் தர வேண்டுமென்று மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் இங்கே கோரிக்கை*

2017 ஜூன் 29]

வைத்திருக்கிறார். மாண்புமிகு உறுப்பினர் அவர்களுடைய கோரிக்கையை நிதிநிலைக்கேற்ப, இந்த ஆண்டே முடியுமானால், அதைக் கட்டித் தருவதற்கு அரசு நடவடிக்கை மேற்கொள்ளும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் டாக்டர் ஆர்.டி. அரசு அவர்கள்.*

டாக்டர் ஆர்.டி. அரசு: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கர்ம வீரர் காமராஜர் அவர்கள் ஆட்சிக் காலத்தில், சற்றேறக்குறைய 50 ஆண்டுகளுக்கு முன்பு கட்டப்பட்ட கட்டடம் இது. இந்த உதவி தொடக்கக் கல்வி அலுவலகமானது முன்பு B.D.O. கட்டுப்பாட்டிலிருந்தது. அதன்பின்னர் A.E.O. கட்டுப்பாட்டிற்கு வந்தது. அதாவது, 1984–1985 ஆம் ஆண்டிலிருந்து இந்த அலுவலகம் அந்தக் கட்டடத்திலே இயங்கி வருகிறது. இந்தக் கட்டடத்தின் மேற்கூரையானது சிமெண்ட் தகடுகளால் வேயப்பட்டுள்ளன. இதன் தரை மிகவும் பழுதடைந்த நிலையில் இருப்பதாலும், சுவர்களில் அதிகமான விரிசல்கள் ஏற்பட்டு, அங்கே விஷப் பூச்சிகள் தங்குகின்ற நிலை இருக்கிறது. மேலும், மழைக் காலங்களில் தண்ணீர் உள்ளே புகுந்துவிடுவதால், தரை மிகவும் பாழ்பட்டுக் கிடக்கிறது. மேலும், அங்கே இருக்கின்ற கதவுகள் அனைத்தும் பாதுகாப்பற்ற நிலையில் இருக்கின்றன. எனவே, 160 அரசு மற்றும் தனியார் பள்ளிகளில் பயிலும் மாணவர்களுடைய எதிர்காலத்தையும், ஆசிரியர்களுடைய வாழ்வாதாரத்தையும் கருத்தில்கொண்டு, இந்த அலுவலகத்தினை புதிதாக விரைந்து கட்டி முடிக்க ஏற்பாடு செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். கட்டடம் கட்டுவதற்கான நிலங்கள் அங்கே இருக்கின்றன. மேலும், இந்தக் கட்டடம் கட்டுவதற்கு ஊராட்சி ஒன்றியத்தின் அனுமதியைப் பெற்று, கருத்துரு மாவட்ட ஆட்சித் தலைவரிடத்திலே அளிக்கப்பட்டுள்ளது. ஆகவே, இந்த அரசு அந்தக் கட்டடத்தை விரைந்து கட்டி முடித்து, பள்ளி மாணவர்களின் எதிர்காலத்தையும், ஆசிரியர்களின் வாழ்வாதாரத்தையும் கட்டிக் காத்திட வேண்டுமென்று செய்யூர் தொகுதி மக்களின் சார்பாகக் கேட்டு, அமர்கின்றேன். நன்றி, வணக்கம்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு பள்ளிக் கல்வி மற்றும் விளையாட்டு மற்றும் இளைஞர் நலத் துறை அமைச்சர் அவர்கள்.*

முற்பகல் 10–05

மாண்புமிகு திரு. கே.ஏ. செங்கோட்டையன்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழகம் முழுவதும் ஏறத்தாழ 413* A.E.O. *அலுவலகங்கள் இருக்கின்றன. அதேபோன்று, 836 உதவித் தொடக்கக் கல்வி அலுவலகங்கள் இருக்கின்றன. மாவட்ட தொடக்கக் கல்வி அலுவலகங்கள்* (D.E.O.) *32 மாவட்டங்களிலும் இருக்கின்றன. அதேபோன்று முதன்மை கல்வி அலுவலகங்கள்* (C.E.O.) *32 இருக்கின்றன. இந்த அலுவலகங்கள் எல்லாவற்றிற்கும் உடனடியாகக் கட்டடங்கள் கட்டித்தருவதற்கேற்ற சூழ்நிலையில் அரசின் நிதிநிலை இல்லை. அந்தக் கட்டடங்கள் மிகவும் பழுதாகி இருப்பதோடு, அவை இடிந்து விழுகின்ற சூழ்நிலையில் இருப்பதாகவும் அவர் தெரிவித்தார். மாண்புமிகு உறுப்பினர் அவர்களின் உணர்வுகளை நாங்கள் புரிந்துகொள்கிறோம். அதேநேரத்தில், காமராஜர் ஆட்சிக் காலத்தில் அந்தக் கட்டடங்களெல்லாம் ஊராட்சி ஒன்றிய அலுவலகத்தோடு இணைக்கப்பட்டிருந்தன. அதற்குப்பிறகு, ஆசிரியர் சங்கங்கள் வைத்த வேண்டுகோளை ஏற்று, அவை பள்ளிக் கல்வித் துறைக்கு மாற்றப்பட்டன. பள்ளிக் கல்வித் துறைக்கு அவை மாற்றப்பட்டிருக்கின்ற காரணத்தினால், எங்கெங்கு இதுபோன்ற கட்டடங்கள் மோசமாக இடியும் நிலையில் இருக்கின்றனவோ, அவை அனைத்தையும் இந்த அரசு பரிசீலிக்கும். அதே நேரத்தில், அரசு அலுவலகங்கள் இயங்கிவரும் கட்டடங்களில் இடம் காலியாகவுள்ளனவா என்பதையும் பார்த்துக்கொண்டிருக்கிறோம். அப்படி காலி இடம் ஏதேனும் கிடைக்குமேயானால், அந்த இடத்தில் இந்த அலுவலகத்தை உடனடியாக மாற்றுவதற்கான ஏற்பாடுகளை அரசு செய்யும். மேலும், மாண்புமிகு உறுப்பினர் குறிப்பிடுகின்ற இடங்களிலுள்ள கட்டடங்களைப் பழுதுபார்ப்பதாக இருந்தாலும் சரி, புதிதாகக் கட்டிக் கொடுப்பதாக இருந்தாலும் சரி, நிதிநிலைகேற்ப இந்த ஆண்டே உடனடியாக நடவடிக்கை மேற்கொள்ளப்படும் என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களின் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. எஸ். ரகுபதி அவர்கள்.*

திரு. எஸ். ரகுபதி: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழகத்தில் செயல்படுகின்ற சுயநிதி மற்றும்* Matriculation

2017 ஜூன் 29]

பள்ளிகளில் பயில்வதற்கு ஏழை, எளிய மாணவர்களுக்கு 25 சதவிகிதம் இலவச இட ஒதுக்கீடு வழங்கப்பட்டு வருகிறது. அவர்களுடைய கல்விக் கட்டணத்தை மட்டும்தான் அரசாங்கம் ஏற்றுக்கொள்கிறது. ஆனால், அங்கே படிக்கின்ற ஏழை எளிய மாணவர்களுக்குத் தேவையான சீருடைகள், காலணிகள், பாடப் புத்தகங்கள், நோட்டுப் புத்தகங்கள் மற்றும் புத்தகப் பைகள் ஆகியவற்றை அவர்களே விலை கொடுத்து வாங்க வேண்டிய சூழ்நிலைதான் இருக்கிறது. ஆனால், அதேநேரத்தில் அரசுப் பள்ளிகளில் இலவசமாக படிக்கின்ற மாணவர்களுக்கு இந்தச் சலுகைகள் வழங்கப்பட்டு வருகின்றன. எனவே, சுய நிதி மற்றும் Matriculation *பள்ளிகளில், அரசு இட ஒதுக்கீட்டின்கீழ் பயிலும் ஏழை எளிய மாணவர்களுக்கு இந்தச் சலுகைகள் வழங்கப்படுமா என்பதை தங்கள் வாயிலாக மாண்புமிகு அமைச்சர் அவர்களிடம் கேட்க விரும்புகிறேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு பள்ளிக் கல்வி மற்றும் விளையாட்டு மற்றும் இளைஞர் நலத் துறை அமைச்சர் அவர்கள்.*

மாண்புமிகு திரு. கே.ஏ. செங்கோட்டையன்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் ஒருசில கருத்துகளை இங்கே தெரிவித்திருக்கின்றார். அனைவருக்கும் கல்வித் திட்டத்தின் அடிப்படையில், ஏழைக் குழந்தைகளின் எதிர்காலத்தை மனதிற்கொண்டு,* C.B.S.E. *பள்ளிகளாக இருந்தாலும்,* Matriculation *பள்ளிகளாக இருந்தாலும், ஒன்றரை கிலோ மீட்டர் சுற்றளவிலுள்ள குழந்தைகள் அந்தப் பள்ளிகளில் படிப்பதற்காக இந்த அரசு நடவடிக்கை மேற்கொண்டு வருகிறது. மத்திய அரசிடமிருந்து நிதி வருவதில் காலதாமதம் ஏற்பட்டிருந்தாலும்கூட, மாண்புமிகு அம்மா அவர்களின் வழிகாட்டுதல்களின்படி செயல்படுகின்ற மாண்புமிகு தமிழக முதல்வர் அவர்களின் தலைமையிலான அரசு, ஏழைக் குழந்தைகள் கல்வி அறிவு பெற வேண்டுமென்பதற்காக இந்த ஆண்டு மட்டும் 126 கோடி ரூபாயை நிதி நெருக்கடி இருக்கின்ற சூழ்நிலையிலும் வழங்கியிருக்கிறது என்பதை இந்த நேரத்திலே குறிப்பிட விரும்புகிறேன். சுய நிதி மற்றும்* matriculation *பள்ளிகளில் பயிலும் ஏழையெளிய மாணவர்களுக்குச் சீருடைகள் மற்றும் பாடநூல்கள் இலவசமாக வழங்கப்படுமா என்று மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் கேள்வி எழுப்பியுள்ளார். இதற்கே நிதி*

நெருக்கடி இருக்கின்ற காரணத்தால், அதற்கு வாய்ப்பில்லை என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களின் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. எம்.ஆர்.கே. பன்னீர்செல்வம் அவர்கள்.

திரு. எம்.ஆர்.கே. பன்னீர்செல்வம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பல தொடக்கப் பள்ளிகளில் ஆசிரியர்கள் இருந்தும், குறைந்த அளவில் மாணவர்கள் படிக்கின்றார்கள். சில பள்ளிகளில் ஒரு மாணவருக்கு இரண்டு ஆசிரியர்கள் என்று இருக்கிறார்கள். இத்தகைய நிலைமை அரசுக்குத் தெரியுமா? இதுசம்பந்தமாக மாண்புமிகு அமைச்சர் அவர்கள் நடவடிக்கை எடுத்திருக்கிறார்களா? அதிகமான மாணவர்களை அரசு தொடக்கப் பள்ளிகளில் சேர்ப்பதற்கு நடவடிக்கை எடுத்திருக்கிறார்களா என்பதை தங்கள் வாயிலாக மாண்புமிகு அமைச்சர் அவர்களிடத்தில் அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு பள்ளிக் கல்வி மற்றும் விளையாட்டு மற்றும் இளைஞர் நலத் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. கே.ஏ. செங்கோட்டையன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஓரிரு இடங்களில் அப்படிப்பட்ட குறைபாடுகள் இருக்கின்றன. இரண்டு ஆசிரியர்கள் இருக்கிறார்கள்; மூன்று அல்லது நான்கு மாணவர்கள்தான் இருக்கிறார்கள் என்று பத்திரிகைகளில்கூட செய்திகள் வந்திருக்கின்றன. அதை அரசு கூர்ந்து கவனித்துக்கொண்டிருக்கிறது. மாவட்ட ஆட்சித் தலைவர், தலைமை ஆசிரியர் மற்றும் ஒன்றிய ஆணையாளர்கள் ஊர்வலமாகச் சென்று மாணவர்களை அரசுப் பள்ளிகளில் சேர்க்கின்ற பணியில் தீவிரமாக ஈடுபட்டிருக்கிறார்கள். இதுபோன்ற குறைபாடுகள் எதிர்காலத்தில் இருக்காது. ஏனென்றால், இந்த அரசு ஒவ்வொரு நடவடிக்கையையும், மற்றவர்களைக் கவருகின்ற அளவில் மேற்கொண்டு வருகிறது. மாண்புமிகு அம்மா அவர்களுடைய வழிகாட்டுதலின்படி நடைபெறுகின்ற இந்த அரசு, எதிர்காலத்தில் இந்தியாவே திரும்பிப் பார்க்கின்ற அளவுக்குத் தமிழகத்தை உருவாக்கிக் காட்டும் என்பதை இந்த நேரத்திலே தெரிவித்துக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. பி.கே. சேகர்பாபு அவர்கள்.

2017 ஜூன் 29]

திரு. பி.கே. சேகர்பாபு: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, வறுமைக்கோட்டிற்குக் கீழே வாழ்கின்ற பெரும்பான்மையான மாணவ, மாணவிகள் மற்றும் குழந்தைகள்தான் அரசுப் பள்ளிகளை நாடிச் செல்கின்றார்கள். குறிப்பாக, சிதிலமடைந்திருக்கிற சில பள்ளிகளில் பழுதுகள் பார்ப்பதற்கு அரசின் சார்பில் நிதி ஒதுக்கப்பட்டும், அந்நிதியை முறையாகச் செலவிடுவதில் காலதாமதம் அதிகமாக ஏற்படுகிறது. சட்டமன்ற உறுப்பினர் தொகுதி மேம்பாட்டு நிதியினைப் பொறுத்தவரையில், பொதுவாக புதிதாகக் கட்டடங்கள் கட்டுவதற்குத்தான் அனுமதி அளிக்கப்படுகிறது. இதுபோன்ற பழுதுபார்ப்புப் பணிகளுக்கும் அனுமதி அளித்தால், அந்தந்த பகுதிகளில் நிலவுகின்ற இதுபோன்ற குறைபாடுகளை உடனடியாக, சட்டமன்ற உறுப்பினர்கள் அரசினுடைய கவனத்திற்குக் கொண்டுவந்து, அந்தப் பழுதுபார்ப்புப் பணிகளை மேற்கொள்வதற்கு ஏதுவாக இருக்கும். மேலும், கடுமையான குடிநீர் பஞ்சம் நிலவுவதால், பல பள்ளிகளுக்குத் தொடர்ச்சியாக கிடைக்கப்பெறுகின்ற குடிநீர் கிடைக்காமல் இருப்பதையும், பள்ளிகளிலே படிக்கின்ற குழந்தைகள் இன்றைக்குக் குடிநீருக்குக் கஷ்டப்படுகின்ற சூழ்நிலை இருப்பதையும் மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு அமைச்சர் அவர்களின் கவனத்திற்குக் கொண்டு வருகிறேன். எனவே, குடிநீர் கிடைப்பதற்குண்டான நடவடிக்கையை விரைந்து எடுக்குமாறு மாண்புமிகு அமைச்சர் அவர்களைக் கேட்டுக்கொள்கிறேன்.*

முற்பகல் 10–10

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு பள்ளிக் கல்வி மற்றும் விளையாட்டு மற்றும் இளைஞர் நலத் துறை அமைச்சர் அவர்கள்.*

மாண்புமிகு திரு. கே.ஏ. செங்கோட்டையன்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சிதிலமடைந்த அரசுப் பள்ளிக் கட்டடங்கள் எங்கும் இல்லை; அப்படிப்பட்ட கட்டடங்கள் எங்கேனும் இருக்குமானால், அதனை உறுப்பினர் அவர்கள் குறிப்பிட்டுக் காட்டினால், உடனடியாக உரிய நடவடிக்கை மேற்கொள்ளப்படும். அதுபோல் நகராட்சிப் பள்ளிகளில், பராமரிப்புப் பணிகளை அவர்களே மேற்கொள்கிறார்கள்; அதுபோல் ஒன்றிய அளவில் இருக்கின்ற பள்ளிகளில் உள்ள பராமரிப்புப் பணிகளையும் அவர்களே மேற்கொள்கிறார்கள். அதுபோல், நகர்மன்றத்தின்*

கட்டுப்பாட்டில் இருக்கின்ற பள்ளிகள் அனைத்திலும், அவர்களே பராமரிப்புப் பணிகளை மேற்கொண்டு வருகிறார்கள். ஆண்டுக்கொரு முறை விடுமுறையின்போது, இதுபோன்ற சிறிய சிறிய பழுதுகள் எங்கு இருக்கின்றனவோ, அங்கெல்லாம் அந்தப் பழுதுகளைச் சீர்செய்ய நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு, சிறப்பான முறையில் பள்ளிகள் இயங்கிக்கொண்டிருக்கின்றன என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *வினா வரிசை எண் 102, மாண்புமிகு உறுப்பினர் திரு. எஸ். ஈஸ்வரன், மாண்புமிகு மின்சாரம், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை அமைச்சர் அவர்கள்.*

102—

துணை மின் நிலையம்

***4527—திரு. எஸ். ஈஸ்வரன்:**

மாண்புமிகு மின்சாரம், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

ஈரோடு மாவட்டம், சத்தியமங்கலம் வட்டம், பெரியகள்ளிப்பட்டி ஊராட்சி, மஜரா முருகன் நகர் அருகில் துணை மின் நிலையம் அமைக்க அரசு ஆவன செய்யுமா?

மாண்புமிகு திரு. பி. தங்கமணி, மின்சாரம், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை அமைச்சர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

மாண்புமிகு உறுப்பினர் அவர்களின் தொகுதியான சத்தியமங்கலம் தொகுதியில், பெரியகள்ளிப்பட்டி ஊராட்சி, மஜரா முருகன் நகரில் எதிர்கால மின் தேவையைக் கருத்தில்கொண்டு, 33/11 கே.வி. துணை மின் நிலையம் அமைப்பதற்குண்டான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு, பணிகள் தொடங்கப்பட்டுள்ளன என்பதை மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்கு மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாகத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. எஸ். ஈஸ்வரன் அவர்கள்.*